மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள், இன்றைக்குதான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் உள்ளது. தயவுசெய்து அமருங்கள்.*

(அ) திருப்பூர் மாவட்டம், விசைத்தறித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறித் தொழிலாளர்களினுடைய போராட்டம் குறித்து, ஏற்கெனவே நான் நேற்றே அறிவிப்பு கொடுத்துவிட்டேன். நேற்றே உங்களிடம் அறிவிப்பு கொடுத்துவிட்டேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்களுக்கு சொன்ன பதில் உங்களுக்கும் பொருந்தும். தயவுசெய்து அமருங்கள்.*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்குமரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. முத்துக்குமரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மதியம் சுமார் 1-30 மணியளவில் மணப்பாறை அருகே ஏற்பட்ட விபத்து குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறோம். அதனை எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்குதான் என்னுடைய அறைக்கு வந்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். துறையினுடைய பதில் வந்தவுடன் அவையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்குப் பரிசீலனை செய்யப்படும். (குறுக்கீடு)* Reply *வரட்டும்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகொண்டான்* Toll gate *இல், ஏற்கெனவே நான் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கோரிக்கை அது?

திரு. ம. கலை அரசு: சாலை வழியாக செல்கின்ற வாகனங்களுக்கு வசூலிக்கப்படுகின்ற கட்டணம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் உள்ளது. அமருங்கள்.

திரு. கு. லிங்கமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூட Toll gate சம்பந்தமாக கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் என்னுடைய ஆய்வில் உள்ளது.

(இ) அரசிதழில் பெயர் மாற்ற அறிவிப்பு வெளியிட்டபின், மாற்றம் செய்யப்பட்ட பெயரில் +1, +2 மாணவர்களுக்கு புதிய சான்றிதழ் வழங்குதல்

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய யாராவது ஒரு மனிதர் தன்னுடைய பெயரை மாற்றம் செய்து Gazette–ல் அறிவிக்கப்பட்டதற்கு பின்னால், பல்கலைக்கழகங்களில் அவருடைய பெயர் மாற்றம் செய்யப்பட்டு புதிய சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால், பள்ளிக் கல்வித் துறையின்மூலமாக ப்ளஸ் 1, ப்ளஸ் 2, 10th படிக்கக்கூடிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறை இல்லை என்று சொல்கிறார்கள். எனவே, பெயர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் வேறு எந்தவிதமான வேலைக்கோ அல்லது படிப்புக்கோ செல்ல முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாக கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.

திரு. சு. குணசேகரன்: எனவே, பெயர் மாற்றம் செய்யப்பட்ட புதிய சான்றிதழை உடனடியாக வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.